1975 மார்ச் 11]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இதெல்லாம் தாவர வகைகளை வளர்க்கும் திட்டத்தின் அடிப்படையில் எடுத்துக் கொள்கிறோம். சந்தன மரங்கள் எந்தெந்தப் பகுதியில் வளர்க்கப்பட வேண்டுமோ அதற்கு ஒவ்வொரு ஆண்டும் நிதி ஒதுக்கப்படுகிறது. அதைச் சற்று அதிகப் படுத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை இருப்பதாக அறிகிறேன்.

திரு. வை. பாலசுந்தரம் : சந்தனத் தைலத்திற்கு உள் நாட்டிலும், வெளிநாட்டிலும் நல்ல கிராக்கி இருக்கிறது. சந்தனத் தைலத் தொழிற் சாலையை அரசு ஏற்று நடத்த சங்கடப்படக்கூடிய சூழ்நிலை இருந்தால் தனியார் முன்வந்தால் அரசு அவர்களுக்கு உதவி புரியுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :சந்தனத் தைலம் தயாரிக்கும் தொழிற்சாலையை ஏற்படுத்தினால் அந்த அளவுக்கு சந்தன மரங்கள் ரா, மெட்டீரியல்கள் கொடுக்க முடியுமா என்பது ஐயப்பாடாக இருக்கிறது. ஆகவே, அரசுத் துறையில் ஆரம்பித்தாலும், தனியார் துறையில் ஆரம் பித்தாலும் ரா, மெட்டீரியல்ஸ் முழு அளவு கொடுப்பதில் சிரமம் ஏற்படக் கூடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

2. அறிவிப்புகள்.

(அ) வேலூர் சி. எம். சி. மருத்துவ மனை பற்றி கொடுக்கப்பட்டுள்ள ஒத்திவைப்புத் தீர்மானங்கள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. சோ.அழகர்சாமி, திரு. வ.ஆர். மாரிமுத்து ஆகியோர் வேலூர் சி.எம்.சி. மருத்துவ மனை பற்றிய பிரச்சினை குறித்து ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

3. வினா நேரம் முடிந்துவந்த ஓர் உறுப்பினர் தன் வினாவிற்குத் துணை வினா கேட்க அனுமதி கோரல்.

திரு. கே. எ. வகாப் : கேள்வி நேரம் முடிந்து விட்டது என்று தாங்கள் கூறிவிட்டீர்கள். முதல் கேள்வி என்னுடைய கேள்வி. நான் சபைக்குக் கொஞ்சம் தாமதமாக வந்தேன். அதற்காக வருத்தப்படு கிறேன். அதனால் அந்தக் கேள்விக்கு நான் துணைக் கேள்விகள் கேட்க முடியவில்லை. அமைச்சர்கள் நேரம் கழித்து வந்தால் அனுமதிக்கப் படுகிறார்கள். அந்த வகையில் எனக்கும் துணைக் கேள்விகள் கேட்க வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதிமுறைகள் இருக்கின்றன. விதி 35 (3)-ல்—

" When all the questins for which an oral answer is desired have been called the Speaker may, if time permits, call again any question which has not been asked by reason of the absence of the member in whose name it stands . . . ."

என்று இருக்கிறது. கேட்காமல் இருக்க வேண்டும். கேள்வி கேட்டு விடை எல்லாம் கொடுத்து, துணைக் கேள்விகள் எல்லாம் கேட்கப்பட்ட பிறகு மறுபடியும் எடுத்துக் கொள்ள முடியாது. இந்த அவையில் அது எழுப்பப்படாமல் இருந்தால் மறுபடியும் எழுப்பலாம். ஆகவே, மறு படியும் அதை எழுப்புவது முறையல்ல.

4. காவல்துறைத் தலைமை அதிகாரி அலுவலகக் கட்டடத்தில் புதிய கொடி பறப்பது குறித்து.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: ஐ.ஜி. ஆபீசில் தொன்று தொட்டு தேசியக் கொடி பறந்து கொண்டிருந்தது. ஒரு சில நாட்களாக தேசியக் கொடி பறக்க வில்லை. புதிதாக ஒரு கொடி இப்போது பறந்து கொண்டிருக்கிறது. இது ஒருவேளை மாநில சுயாட்சிக் கொடியா அல்லது வேறு எந்தக் கொடியோ என்று நாங்கள் எல்லாம் ஐயப்படுகிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்—அது என்ன கொடி, எந்த அரசாங்க உத்தரவின்பேரில் பறக்கிறது என்பதை அவைக்குத் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பல ஆண்டுக் காலமாக ஐ.ஜி. ஆபீஸ் கட்டடத்தின் முகப்பில் இந்திய தேசியக் கொடிதான் பறந்து கொண்டிருந்தது. திடீரென்று ஒரு வாரத்திற்கு முன்பு என்று கருது கிறேன். மத்திய அரசிலிருந்து ஒரு உத்தரவு வந்தது. ஐ.ஜி.ஆபீசில் இந்திய தேசியக் கொடி பறக்கக்கூடாது என்ற உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. எல்லா மாநிலங்களுக்கும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதைப் போல் இங்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஐ.ஜி. சர்க்காருக்கு எழுதிக் கேட்டார்—வெறும் போஸ்ட் இருப்பதா அல்லது கொடி போடுவதா என்று. தமிழ் நாடு அரசினுடைய சின்னத்தை இணைத்து ஏற்கெனவே போலீசாருக்குரிய நீல நிற வண்ணக் கொடி பறக்க விடப்பட்டிருக்கிறது. இப்போது ஐ.ஜி. ஆபீசில் மாத்திரம் பறக்க ஆரம்பித்திருக்கிறது.